<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.115/2025</u>

<u>14.07.2026</u>

**திரு. தமிழரசன் , த/பெ. தோலான்**

<u>PW :</u> 1

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனது வருமானம் மாதம் ரூ.30,000/- என்பதை நிருபிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக பால் வியாபாரத்திற்கு மாலை சென்று இரவு திரும்புவது வழக்கம் என்றால் மாலை 07.30 மணிக்கு வருவேன். காலை மாலை 2 வேளைகளும் சென்று வருவேன். சுமார் 70 வீடுகளுக்கு பால் கொடுத்து வருகிறேன். பால் கொடுத்துவிட்டு வரும்போது உடல் சோர்வாக வருவேன் என்றால் அப்படி இல்லை. விபத்து நடந்த இடம் இருட்டான பகுதி என்றால் சரியல்ல. வெளிச்சம் இருக்கும்.

வீட்டுக்கு செல்ல வேண்டும் நேரமாகிவிட்டது என்பதால் நான் தான் எனது வாகனத்தை வேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. 30 வருடமாக பால் வியாபாரத்திற்கு சென்று வருகிறேன். விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதையும், அதிவேகம் காரணம் என்றால் சரியல்ல. நான் பொதுவாக 30 கிலோமீட்டர் வேகத்தில் தான் செல்வேன். உண்மை நிகழ்வை மறைத்து நான் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால் 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

நான் சிகிச்சைக்கு பிறகு முழுமையாக குணமாகிவிட்டேன் என்றாலும், நான் மனுவில் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றாலும் சரியல்ல. இம்மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.07.14 17:57:22 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்